# ‘மிக்ஜாம் புயல்’: களத்தில் அமைச்சர்கள் - கழக முன்னணியினர்!




நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (03.12.2023) வங்கக்கடலில் உருவாகியுள்ள மிக்ஜாம் புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளின் ஒருபகுதியாக கோடம்பாக்கம் இரயில் நிலையத்தில் அதிக திறன் கொண்ட மோட்டார் பம்புகள் மூலமாக மழைநீர் வெளியேற்றும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன்குமார், தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.ராஜேந்திரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், துரைநல்லூர் 110 கி.வோ. துணை மின் நிலையத்தில், நேற்று (03.12.2023) வங்க கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளபட்டுவரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் ஆய்வு செய்தார். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.எஸ். கோவிந்தராஜன், மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) மா.இராமசந்திரன், இயக்குநர் (பகிர்மானம்) இரா. மணிவண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் இருந்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம், மூவரசம்பட்டு ஏரியில் வடகிழக்கு பருவமழையினால் மழைநீர் நிரம்பி உபரிநீர் வெளியேறுவதை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பார்வையிட்டு பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீர்வளத்துறை அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல்நாத், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி, மாநகராட்சி கண்காணிப்பு அலுவலர் ஆ.ஜான்லூயிஸ், மாநகராட்சி ஆணையாளர் ஆர்.அழகுமீனா, உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆனந்த்குமார் சிங், மண்டல குழு தலைவர் ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம்,காக்களூர் ஊராட்சி அன்னை தெரேசா நகர் பகுதி தொடர் கன மழையால் பல்வேறு இடங்களில் பாதிப்புக்கு உள்ளானது. இதனை அறிந்த பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி இப்பகுதியில்கொட்டும் மழையில் ஆய்வு மேற்கொண்டு குடிசைப் பகுதிகளில் தேங்கிய மழை நீரை உடனடியாக வெளியேற்றவும்,மற்றும் குடிசையில் வசிக்கும் ஏழைகளை கணக்கெடுத்து அவர்களுக்கு அரசு சார்பில் காங்கிரட் வீடுகள்உடனடியாக கட்டித்தர நடவடிக்கை எடுக்குமாறும்,மற்றும் இப்பகுதியில் சாலைகளை ஏற்படுத்தித் தரவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது திருவள்ளூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் காக்களூர் ஆர்.ஜெயசீலன், பொதுக்குழு உறுப்பினர் ஒன்றிய கவுன்சிலர் த.எத்திராஜ், திருவள்ளூர் வட்டாட்சியர் சுரேஷ்குமார் உட்பட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க வடகிழக்கு பருவமழை மற்றும் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி பூவிருந்தவல்லி நகராட்சி திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் உள்ள இடங்களை நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு புயல் சீற்றத்தை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நேரில் பார்வையிட்டு முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் குறித்து ஆய்வு செய்து, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கினார். உடன் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, நகராட்சி நிர்வாகத்துறை முதன்மைச் செயலாளர் கார்த்திகேயன், ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் ஷேக் அப்துல்லா ரகுமான், நகர் மன்ற தலைவர்கள் என்.இ.கே.மூர்த்தி, காஞ்சனா சுதாகர், மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன், மாநகர நகர பகுதி கழக செயலாளர் சன்.பிரகாஷ், ஜி.ஆர்.திருமலை, ஜி.நாராயணபிரசாத், பொன்.விஜயன், துணை தலைவர் ஸ்ரீதர் உள்பட நகராட்சி துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



வங்கக் கடலில் உருவாகியுள்ள மிக்ஜாம் புயல் காரணமாக நாகை மாவட்டத்தில் மழை பெய்து வரும் நிலையில் நாகை மாவட்டத்திற்கு தமிழ்நாடு பேரிடர் மீட்பு குழுவினர் 31 பேர் வந்துள்ளனர். மீட்புக் குழுவினரின் உபகரணங்களை சட்டத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி நேரில் பார்வையிட்டார். உடன் நாகை மாவட்டச் செயலாளர் – தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடம் வர்கீஸ் நாகை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஹர்ஸ்சிங் நாகை நகர மன்ற தலைவர் நகரச் செயலாளர் இரா. மாரிமுத்து மற்றும் நாகூர் நகரச் செயலாளர் எம். ஆர். செந்தில்குமார், எஸ்.பால்ராஜ் வெற்றிலைக்கடை சிவா மற்றும் பலர் உள்ளனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு41, கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் பங்கிங்ஹாம் கால்வாய் சந்திப்பில் மழைநீர் தடையின்றி சீராகச் செல்வதை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (03.12.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், நகரமைப்புக்குழுத் தலைவர் தா.இளைய அருணா, தண்டையார்பேட்டை மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், மாமன்ற உறுப்பினர் திருமதி விமலா மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க வடகிழக்கு பருவமழை மற்றும் மிக்ஜாம் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் மற்றும் மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட விச்சூர், வெள்ளிவாயில், ஆலாடு மனோபுரம், ஏ.ரெட்டிப்பாளையம், பிரளயம்பாக்கம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள கொசத்தலை ஆறு மற்றும் ஆரணியாற்றின் கரைப்பகுதிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பாதிப்புக்குள்ளாக் கூடிய பகுதிகளை கண்டறிந்து பலப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / வருவாய்த்துறை அரசு செயலர் வி.ராஜாராமன் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.ராஜ்குமார், உள்பட அரசு அதிகாரிகள் உள்ளனர் .



வங்கக்கடலில் உருவாகியுள்ள மிக்ஜாம் புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளின் ஒருபகுதியாக பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், முசிறி சுப்பிரமணியம் சாலையில் டிராக்டரில் பொருத்தப்பட்ட மோட்டார் பம்புகள் மூலமாக தேங்கியுள்ள மழைநீரினை வெளியேற்றும் பணியினை துணை மேயர்.மு.மகேஷ்குமார் நேற்று (03.12.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.